BSNL *ஊழியர் சங்கம்*

தமிழ் மாநிலம்

***சுற்றறிக்கை எண்*: 85** ***தேதி*:-21.07.2018**

ஒன்று பட்ட, உறுதியான போராட்டங்களால் முடியாது என்றதை சாதித்த BSNL ஊழியர்களுக்கு வாழ்த்துக்கள்!

அன்புள்ள தோழர்களே,

அனைத்து BSNL ஊழியர்களையும், அதன் ஊழியர் மற்றும் அதிகாரிகள் சங்கங்களையும் BSNL ஊழியர் சங்கம் மனதார பாராட்டுகிறது. ஆம் தோழர்களே, நாம் முடியாது என்ற விஷயத்தை அடைந்திடும் தூரத்தை நெருங்கியிருக்கிறோம். 01.01.2017 முதல் நடைபெற வேண்டிய ஊதிய மாற்றத்திற்கு BSNL ஊழியர்கள் தகுதி பெறவில்லை என 3வது ஊதிய மாற்றக்குழு (3RD PRC) தெரிவித்தது. மத்திய அமைச்சரவையும் அந்த அறிவிப்பை ஏற்றுக் கொண்டது. BSNL ஊழியர்கள் ஊதிய மாற்றத்திற்கும், BSNL ஓய்வூதியர்கள் ஓய்வூதிய மாற்றத்திற்கும் தகுதியானவர்கள் இல்லையென DOT தனது 21.02.2018 தேதியிட்ட கடிதத்தின் மூலம் தெரிவித்தது. எனினும், நமது தொடர்ச்சியான போராட்டங்கள், முயற்சிகள் மற்றும் அறிவு பூர்வமான உத்திகள் பலனை தர துவங்கியுள்ளது. 27.07.2017ல் நடைபெற்ற ஒரு நாள் வேலை நிறுத்தம், 2017, டிசம்பர் 12 மற்றும் 13ஆம் தேதிகளில் நடைபெற்ற இரண்டு நாட்கள் வேலை நிறுத்தம், 23.02.2018 அன்று நடைபெற்ற வலுவான சஞ்சார் பவன் நோக்கிய பேரணி மற்றும் 200க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கொடுத்த மகஜர் மற்றும் எண்ணிலடங்காத இதர போராட்டங்கள், இன்று BSNL ஊழியர்களுக்கு ஊதிய மாற்றத்தை நிஜமாக்கி உள்ளது. ஆம் தோழர்களே, BSNL ஊழியர்களுக்கான ஊதிய மாற்றத்திற்கான பேச்சு வார்த்தை 20.07.2018 அன்று துவங்கியுள்ளது. ஊதிய மாற்றத்தை நிறைவு செய்ய இன்னமும் வெகு தூரம் நாம் போக வேண்டி உள்ளது. எனினும் ஊதிய மாற்றத்திற்கான பேச்சு வார்த்தை துவங்கியதே ஒரு மிகப்பெரிய சாதனை தான். நாம் சாதித்துள்ளோம். நமது ஒற்றுமையும் ஒன்று பட்ட போராட்டங்களுமே இதனை சாத்தியமாக்கி உள்ளது. அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

ஊதிய மாற்றக் குழுவின் முதல் கூட்டம்:- BSNL ஊழியர்களின் ஊதிய மாற்றத்திற்கான இணைந்த குழுவின் முதல் கூட்டம் சுமுகமான சூழலில் 20.07.2018 அன்று நடைபெற்றது. இணைந்த குழுவின் தலைவரான திரு H.C.பந்த் CGM(LEGAL) தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நிர்வாக தரப்பில் திரு சௌரப் தியாகி Sr.GM(Estt), திருமிகு ஸ்மிதி சௌத்ரி GM(EF), திரு A.M.குப்தா GM(SR) மற்றும் திரு A.K.சின்ஹா DGM(SR) ஆகியோர் பங்கேற்றனர். BSNL ஊழியர் சங்கத்தின் சார்பாக தோழர் P.அபிமன்யு GS, தோழர் பல்பீர்சிங் PRESIDENT, தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS, தோழர் அசோகா பாபு VP, தோழர் அனிமேஷ் மித்ரா VP மற்றும் NFTE சார்பாக தோழர் C.சந்தேஸ்வர் சிங் GS, தோழர் இஸ்லாம் அகமது PRESIDENT, தோழர் K.S.ஷேசாத்ரி Dy.GS ஆகியோரும் பங்கு பெற்றனர்.

துவக்கத்திலேயே திரு A.M.குப்தா GM(SR) அவர்கள் அனைவரையும் வரவேற்றார். இந்த இணைந்தக் குழுவின் முதல் கூட்டத்தினை விரைவில் நடத்தியதற்கு ஊழியர் தரப்பு உறுப்பினர்கள் நிர்வாகத்திற்கு நன்றி தெரிவித்தனர். இயன்ற அளவிற்கு குறைந்த கால அளவில் ஊதிய மாற்றத்தை இறுதி செய்ய தங்களின் முழுமையான ஒத்துழைப்பை அவர்கள் உறுதி படுத்தினர்.

அதன் பின்னர் DPE தனது 24.11.2017 தேதியிட்ட கடிதத்தில் ஊழியர்களின் ஊதிய மாற்றத்திற்கு கொடுத்துள்ள வழிகாட்டுதல்களில் உள்ள பிரிவுகளை நிர்வாக தரப்பினர் விளக்கமாக எடுத்துக் கூறினர். அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் இடையேயான ஊதிய விகிதத்தில் முரண்பாடுகளை தவிர்க்க மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் முறைப்படுத்தப்பட்ட பஞ்சப்படி இணைப்பு மற்றும் / அல்லது முறைப்படுத்தப்பட்ட நிர்ணயத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ள DPE வழிகாட்டுதலின் பாரா (vi) தொடர்பான விளக்கத்தை ஊழியர் தரப்பில் கோரப்பட்டது. இதற்கான விளக்கத்தை DPEயிடம் இருந்து பெறப்படும் என நிர்வாக தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

31.08.2018க்குள் ஊதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும் வகையில் கூட்டங்களை அடிக்கடி தொடர்ச்சியாக நடத்த வேண்டும் என ஊழியர் தரப்பு நிர்வாகத்திற்கு ஆலோசனை வழங்கியது. இது தொடர்பான முழுமையான ஒத்துழைப்பை தருவதாக நிர்வாக தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஊதிய மாற்றத்திற்கான இணைந்த குழுவின் அடுத்த கூட்டம் 09.08.2018 அன்று மாலை 15.30 மணிக்கு நடைபெறும் என முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் புதிய ஊதிய விகிதங்களை உருவாக்குவது தொடர்பாக விவாதிக்கப்படும்.

ஊழியர்களுக்கு அதிகப்படியான பலனை பெற்றுத் தரும் வகையில் இணைந்து செயல்பட BSNL ஊழியர் சங்கமும் NFTEயும் முடிவு:- 20.07.2018 அன்று ஊதிய மாற்றத்திற்கான இணைந்த குழுவின் கூட்டம் முடிவடைந்தபின், இயன்ற அளவு குறைந்த கால அளவிற்குள் ஊதிய மாற்ற உடன்பாட்டை எட்டுவதற்கு தேவையான உத்திகளை

கையாள்வது தொடர்பாக இந்த கமிட்டியில் உள்ள ஊழியர் தரப்பு உறுப்பினர்கள் சந்தித்து விவாதித்தனர். குறைந்த அளவிலான காலத்தில், ஊழியர்களுக்கு அதிகப்படியான பலனுடன் கூடிய ஊதிய மாற்றத்தை இறுதி செய்ய இரண்டு அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களும் நெருக்கமாக இணைந்து பணியாற்றுவது என ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. புதிய ஊதிய விகிதங்கள் உருவாக்குவது தொடர்பான பல்வேறு விஷயங்களை இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. 09.08.2018 அன்று நடைபெற உள்ள அடுத்த ஊதிய மாற்றத்திற்கான இணைந்த குழுவின் கூட்டத்தில் இரண்டு அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களும் ஒரு இணைந்த முன்மொழிவை நிர்வாகத்திடம் வழங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த முன்மொழிவை இறுதி செய்ய 03.08.2018 அன்று காலை 10.00 மணிக்கு NFTE அலுவலகத்தில் ஊழியர் தரப்பு உறுப்பினர்கள் சந்திப்பு நடைபெறும்.

மூன்று நாட்கள் தொடர் உண்ணாவிரதத்தை சக்தியாக நடத்த BSNLEU மற்றும் NFTE முடிவு:- 24.02.2018 அன்று நடைபெற்ற கூட்டத்தில் மத்திய தொலை தொடர்பு அமைச்சர் கொடுத்த வாக்குறுதிகளை உடனடியாக அமலாக்க கோரி 24,25 & 26-07-2018 ஆகிய மூன்று தினங்கள் தொடர் உண்ணாவிரதம் நடத்த AUAB ஏற்கனவே அறைகூவல் விடுத்துள்ளது. 20.07.2018 அன்று சந்தித்த BSNLEU மற்றும் NFTE தலைவர்கள் இது தொடர்பாக விவாதித்தனர். அதிகப்படியான ஆட்களை திரட்டுவதன் மூலம் கார்ப்பரேட் அலுவலகத்தில் இந்த போராட்டத்தை சக்தியாக நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

மூன்று நாட்கள் உண்ணாவிரதத்தை வெற்றிகரமாக்குவோம்:- 3வது ஊதிய மாற்றம், ஓய்வூதிய மாற்றம், BSNLக்கு 4Gஸ்பெக்ட்ரம் வழங்குவது மற்றும் அரசு விதிப்படி BSNL நிறுவனத்திடமிருந்து ஓய்வூதிய பங்கீடு பெறுவது ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து ஜுலை 24ஆம் தேதி முதல் நடைபெற உள்ள தொடர் உண்ணாவிரத போராட்டத்தை வெற்றிகரமாக்க மாவட்ட சங்கங்கள் முமு முயற்சி மேற்கொள்ள வேண்டும். தொடர் உண்ணாவிரதம் நடைபெற உள்ள மூன்று நாட்களிலும் அதிகப்படியான ஊழியர்களை பங்கேற்க செய்யும் வகையில் AUABயில் உள்ள அனைத்து அமைப்புகளுடன் இணைந்து கடுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநில செயலாளர்.